முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஆதரவற்ற முதியோர் கருணை இல்லத்தில் மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி அறுசுவை உணவு மற்றும் இல்லத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் உள்ளிட்ட இல்லத்திற்கு தேவையான பொருட்களை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.குமாரசாமி ப.மணிராசு, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிர மணியம், மா.சு.ராதாகிருஷ்ணன், பூபதி, பொ.ராமச்சந்திரன், இரா.சேகரன், சுள்ளான் எஸ்.ராஜேந்திரன், திருவாசகம், சங்கரன், கார்த்திக், அம்பேத்கார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா!

தி.மு.க. மகளிரணி சார்பில் இசையரங்கம் - நாட்டிய அரங்கம்-வாழ்த்தரங்கம்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் கயல்விழி செல்வராஜ் - டி.கே.எஸ்.இளங்கோவன்-பங்கேற்பு!

சென்னை, ஜூன் 7-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு 5.6.2023 அன்று திங்கள்கிழமை, சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில், தி.மு.க. மகளிரணி சார்பில், கலைஞர் அவர்கள் எழுதிய திரைப்பட பாடல்களை தொகுத்து இசையரங்கம், நாட்டிய அரங்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து வாழ்த்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை கண்டுகளித்து, விழா பேருரையாற்றினார்!

இதில், அமைச்சர் கயல் விழி செல்வராஜ், கழக செய்தித் தொடர்புக் குழு தலைவர் டி.கே.எஸ் இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர்கள் எழிலன், தமிழரசி, தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், உதகை நகர தி.மு.க. சார்பில், உதகை வண்ணாரப்பேட்டை பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையத்தில் அறுசுவை உணவு வழங்கி துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில்

திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சார கூட்டங்கள்!

அமைச்சர் சு.முத்துசாமி தலைமை அந்தியூர் ப.செல்வராசு எம்.பி., மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் முன்னிலை!

மாநில இளைஞரணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் அறிக்கை

ஈரோடு, ஜூன் 7-

ஆட்சி பொறுப்பேற்ற இரண்டே ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்களுக்காக பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி நாடேபோற்றி பாராட்டும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி அவர்களின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில், கழக துணை பொதுசெயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப. செல்வராசு மாநகர கழக செயலாளர் மு.சுப்பிர மணியம் முன்னிலையில் கீழ் கண்ட நாட்களில் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் நடைபெற உள்ளன.

9.6.2023 ஈரோடு மற்றும் சென்னிமலை வடக்கு ஒன்றியம், சூரியம்பாளையம் பகுதியில் ஒன்றிய செயலாளர்கள் தோப்பு சதாசிவம், பி.செங்கோட்டையன், பகுதி செயலாளர் எஸ். குமாரவடிவேல் தலைமையில் கி.ரகுராம், வெ. பா.இளங்கோ முன்னிலையில் சத்தியவதி சிவக்குமார், ஈரோடு இளையகோபால், திருப்பூர் மனோகர்பாபு

10.6.2023 மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம், வீரப்பன்சத்திரம், பெரியார் நகர் பகுதியில் ஒன்றிய செயலாளர் ஆர்.விஜயகுமார், பகுதி செயலாளர்கள் வி.சி.நடராஜன், அக்னிசந்துரு தலைமையில் எஸ். ரமேஷ், க.சதீஸ்குமார் முன்னிலையில் ஈரோடு இளையகோபால், திருப்பூர் ரஜினி செந்தில், பவானி கண்ணன்

11.6.2023 மொடக்குறிச்சி மேற்கு, மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம், பெரியசேமூர் பகுதியில் ஒன்றிய செயலாளர்கள் சு.குணசேகரன், வா.கதிர்வேல் பகுதி செயலாளர் வி.செல்வராஜ் தலைமையில் ஆர்.சுதன், ப.விஜயகுமார் முன்னிலையில் பவானி கண்ணன், திருப்பூர் மனோகர்பாபு, திருப்பூர் ரஜினி செந்தில்

12.6.2023 கொடுமுடி வடக்கு, கொடுமுடி மேற்கு ஒன்றியம், கோட்டை பகுதியில் ஒன்றிய செயலாளர்கள் மு.சின்னசாமி, பா.நடராசன் பகுதி செயலாளர் பொ.ராமசந்திரன் தலைமையில் எஸ்.சதீஷ்குமார், டி.மோகனசுந்தரம், எஸ். பூபதி முன்னிலையில் சத்தியவதி சிவக்குமார், ஈரோடு இளையகோபால், திருப்பூர் மனோகர்பாபு

13.6.2023 பெருந்துறை கிழக்கு, பெருந்துறை வடக்கு ஒன்றியம், சூரம்பட்டி பகுதியில் ஒன்றிய செயலாளர்கள் சி.பெரியசாமி, பால் சின்னசாமி பகுதி செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன் தலைமையில் எஸ்.எம்.பாலசுப்பிரமணி, கே.டி.சேந்தபுகழன் முன்னிலையில் சிங்கை பிரபாகரன், ஈரோடு இளையகோபால், சத்தியவதி சிவக்குமார்

14.6.2023 ஊத்துக்குளி வடக்கு, ஊத்துக்குளி தெற்கு, ஊத்துக்குளி மத்திய ஒன்றியம், ஒன்றிய செயலாளர்கள் செ.சுப்பிரமணியம், பி.பி.ஈஸ்வரமூர்த்தி, வி.ராஜா தலைமையில் டி.ஜோதி, ஆர்.அன்பரசு முன்னிலையில் பவானி கண்ணன், சிங்கை பிரபாகரன், ஈரோடு இளையகோபால்

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம், வி.சி.சந்திரகுமார், ஈரோடு இறைவன், சு.ராதாகிருஷ்ணன், குறிஞ்சி என். சிவக்குமார், வீரமணி ஜெயக்குமார், மாவட்ட நிர்வாகிகள் கே.குமார்முருகேஸ், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், அ.செல்லபொன்னி, ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, ராஜ் (எ) முருகேசன், என்.கொண்டசாமி, சி.கேசவன், எம்.கோபால், பி.கதிர்வேல், என்.டி.பத்மநாபன், டி.ஜி.கே.பூபதி, நா.மகாலிங்கம், ஆர்.பொன்னுசாமி, மு.பல்கீஸ், மாநகர நிர்வாகிகள் இரா.சேகரன், விமல் (எ) நந்தகுமார், கே.சந்திரசேகர், இ.பாத்திமா, ஜி.சண்முகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் செ.பரமசிவம், வி.எஸ்.சங்கர், கே. வசந்த் (எ) விஜயகுமார், நா.செல்வம், எம்.தனசேகர் மாநகர இளைஞரணி அமைப்பாளர் எஸ்.சுரேஸ்குமார், துணை அமைப்பாளர்கள் பெ.ரா.பாலு, அம் முசுரேஷ்குமார், எஸ். உசேன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இத்தெருமுனை கூட்டங்கள் சம்மந்தப்பட்ட ஒன்றிய, பகுதி கழக செயலாளர்கள் ஒத்துழைப்புடன் அந்தந்த ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், இளைஞரணி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்க செய்து மிகவும் எழுச்சியுடன் நடத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட துணைச் செயலாளரும் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான தழுதாழை சி. பாஸ்கர் தந்தை ந.சிதம்பரம்(வயது 94), அவர்கள் வயது மூப்பின் காரணமாக காலமானார். வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், தழுதாழை கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு போக்குவரத்துத்துறை துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மலரஞ்சலி செலுத்தினார். பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். நல்லதம்பி, வீ.ஜெகதீசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமை! அமைச்சர் ஆர்.எஸ். இராஜ கண்ணப்பன் முன்னிலை!

திருநெல்வேலியில் ரூ.31 கோடி மதிப்பில் மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டிடம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திட்டப்பணியை துவக்கி வைத்தார்!

திருநெல்வேலி, ஜூன் 7-

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், ரூ.30 கோடி மதிப்பில், மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டடம் கட்டுவதற்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தலைமையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் முன்னிலையில், , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, அரசு முதன்மை செயலாளர், கக்கன் தீப்சிங் பேடி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன், ஆகியோர்கள் முன்னிலையில் நேற்று (05.06.2023) அடிக்கல் நாட்டி ரூ.1.54 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்கள்.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

இந்நிகழ்ச்சியில், , சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஏழை எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வள்ளியூரில் புதியதாக மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைய அமைச்சர், அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த மருத்துவமனை 200 படுக்கைகள் கொண்ட வசதியில் அமையவுள்ளது. இதில் 24 மணி நேரமும் சிகிச்சை வசதியுடன் கூடிய படுக்கை வசதியும் உள்ளது. முன்பு காலங்களில் நமக்கு உடலில் பிரச்சனை ஏற்பட்டால் உடனே இங்கியிருந்து பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தது. இப்பகுதி மக்களின் நலன் கருதி இந்த தலைமை மருத்துவமனை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள ரோட்டரிகிளப் சங்கங்கள், வியாபாரி சங்கங்கள், அனைத்து அமைப்பினரும் இப்பகுதிக்கு மாவட்ட தலைமை மருத்துவமனை கொண்டு வரவேண்டும் என முனைப்புடன் செயல்பட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு கொரோனா காலங்களில் மருத்துவமனைக்கு தேவையான அடிப்படை வசதிகளான ஆக்சிஜன் வசதிகள் கொண்ட படுக்கை வசதிகள் ஏற்படுத்தி தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக செயல்பட்டு வந்தது.

தமிழ்நாட்டில் கொரோனாவால் ஒரு உயிர் இழப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக முனைப்புடன் செயல்பட்டு வந்தார்கள். ,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இத்துறையை நன்றாக அறிந்து சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். வள்ளியூருக்கு முதன் முதலாக ஆரம்ப சுகாதார நிலையம் கொண்டு வந்தது முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மாவட்ட தலைமை மருத்துவமனை வள்ளியூரில் அமைந்தால் நாங்குநேரி, இராதாபுரம், காவல்கிணறு ஆகிய பகுதிகளில் வசிக்கும்; மக்கள் மருத்துவ வசதி மேற்கொள்வதற்கு சிறப்பாக அமையும் என்பதற்காக இப்பகுதியை தேர்ந்தெடுக்கப்பட்டு மருத்துவமனை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை இப்பகுதியில் அமைத்து தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இப்பகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்தார்கள்.

அமைச்சர் ராஜகண்ணப்பன் பேச்சு

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு குடிநீர், சாலை வசதி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் மக்களின் தேவை அறிந்து பூர்த்தி செய்து வருகிறது.

சிறப்பான திட்டமான புதுமைப்பெண் திட்டம் மூலம் கல்லூரி மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 ஊக்கதொகை வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை திட்டம் மற்றும் மகளிர்களுக்கு இலவச பேருந்து வசதிகள் போன்ற என்னற்ற திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் சிறப்பான அரசை நடத்தி வருகிறது ,தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசாகும். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தமிழ்நாட்டில் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கொரோனா காலங்களில் சிறப்பான மருத்துவ வசதி மேற்கொண்டு மக்களுக்கு சிறப்பான மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டது.

கல்விக்கும் சுகாதாரத்திற்கும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அனைத்து தரப்பினரும் பாராட்டும் விதமாக ,தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார்கள்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு மிக முக்கிய நிகழ்வுகளின் மூலம்; ஏற்கனவே புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை திறந்து வைப்பதற்கும், புதிய மருத்துவத் துறைக்கு சம்பந்தமான கட்டிடங்களை கட்டும் பணிகளை தொடங்கி வைப்பதற்கும் நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருக்கிறது.

வள்ளியூரில் அரசு மருத்துவமனை ஏற்கனவே வட்டார அளவிலான மருத்துவமனை ஒன்று இயங்கிக் கொண்டிருந்தது. தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்கள் கடந்த ஒன்றரை ஆண்டுக்கு முன்னால் நம்முடைய ,தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், வள்ளியூர் வட்டார மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்திட வேண்டும் என்கின்ற வேண்டுகோளை வைத்தார்கள்.

அதற்கான விரிவான பரிசோதனைகளை, விரிவான ஆய்வுகளை அலுவலர்களின் மூலம் ஆய்வு செய்ய சொல்லி அதனுடைய பயன்பாடு குறித்த விவரங்களை எல்லாம் கேட்டு பெற்று அந்த வகையில் இன்று வள்ளியூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைவதற்குரிய தகுதியான ஊர் என்கின்ற வகையில் அதற்கு ஒப்புதல் தந்து புதிய மருத்துவ கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு ரூபாய் 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்கள். அதோடு மட்டுமல்லாது இங்கே அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வில் கட்டிடம் ஒன்று ரூ.1 கோடியில் அமையும் என்று ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு தற்போது 31 கோடி ரூபாய்க்கான கட்டிடங்களை கட்டும் பணிகள் இப்பொழுது தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது.

முதற்கட்டமாக 10 மையங்கள் முழுமையாக கட்டி முக்கப்பட்டுள்ளது. இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் ஆகிய நபர்கள் அடங்கும். ,தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளை 500 மருத்துவ கட்டிடங்களை சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கவுள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் அருகே மினிடோர் கவிழ்ந்ததில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த குமாரம்பட்டியை சேர்ந்த பொதுமக்களை அரூர்அரசு மருத்துவமனையில் பேரூர் கழக செயலாளர் முல்லைரவி நேரில் சந்தித்து உதவிகள் வழங்கி ஆறுதல் கூறினார்.உடன் கழக மேற்கு மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார்,ஒன்றிய செயலாளர் ஆர்.வேடம்மாள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்ட துணைச் செயலாளர்

சி.பாஸ்கர் தந்தை சிதம்பரம் மறைவு!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் அஞ்சலி!

பெரம்பலூர், ஜூன் 7-

பெரம்பலூர் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் தழுதாழை சி.பாஸ்கர் தந்தை ந.சிதம்பரம் (94) அவர்கள் நேற்று முன்தினம் (05.06.2023), காலை 11.00 மணியளவில் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் தி.மு.க.வினர் ஏராளமானோர் கலந்து கொண்டு மறைந்த சிதம்பரம் அவர்களின் உடல் மீது அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் உடல், நேற்று (06.06.2023), பிற்பகல் 1.30 மணியளவில், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியத்தில் உள்ள தழுதாழை கிராமத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திராவிட மணி

ஜூன் 7 (2001)

கருநாடக மாநிலத்தில் கழகத்தை வளர்த்த தளகர்த்தர். கருநாடக மாநில அமைப்பாளராகவும், கழக சட்டமன்ற உறுப்பினராகவும், பெங்களூர் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

1960ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையாளராக நின்று நடத்திய கழகத் தேர்தலில் கருநாடக மாநில அமைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு பெற்றவர். தொடர்ந்து கழக வளர்ச்சிக்காக திறம்பட பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும்விழாவில் இவருக்கு 'கலைஞர் விருது' வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.